விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 08 வெள்ளிக்கிழமை (24.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

### திலீபனுக்கு நினைவேந்தல்

# கஜேந்திரன் கைதாகி பிணையில் விடுவிப்பு



### 27ஆம் திகதி வழக்கு

*(யாழ்ப்பாணம்)*

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்த முற்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்றி 15

## கோவிட் புதிய திரிபு எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

(கொழும்பு)

கோவிட் திரிபுகளில் கட்டுப் படுத்த சிரமமான புதிய வைரஸ் திரிபு சம்பந்த 15

## திலீபனின் நினைவேந்தலுக்கு யாழ்.நீதிமன்றம் தடை

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினை வேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு தடை 15

## நாட்டில் மேலும் 72 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றால் 15

# இனப் பிரச்சினைக்கு நீதியான தீர்வு அவசியம்



## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஜி.எல்.பீரிஸிடம் வலியுறுத்து

*(நியூ யோர்க்)*

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயமானதும் நீதியானதுமான தீர்வு அவசியம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் நியூயோர்க்கில் வைத்து வலியுறுத்தியுள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## கிளிநொச்சியில் கொரோனாவால் ஒருவர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த 83 வயதுப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை 15

வெற்றிலைக்கேணியில்

## மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடிப் பகுதியில் மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற இச்சம்பவத்தில் இடைக்காடு வெற்றி 15

உடுவில் பிரதேச செயலக

## உத்தியோகத்தர் கோவிட்டால் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றியவரும் திருமதி தமிழினி பிரபாகரன் (வயது-44) 15

## வடமராட்சியில் இளம் பெண் திடீர் மரணம்



### தொற்றுக்குள்ளாகி குணமடைந்திருந்தவர்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சியில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்திருந்த குடும் 15

நல்லூரில் அமைந்துள்ள

## திலீபனின் நினைவுத் தூபியை சுற்றி பொலிஸார் கடமையில்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றி பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்



15

## யாழில் உயிரிழந்த மூவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உயிரிழந்த மூவருக்கு 15

கெரவலப்பிட்டிய மின் நிலையம்

## மகிந்த தலைமையில் அரச பங்காளிகள் பேச்சு

(கொழும்பு)

பொதுஜன கூட்டமைப்பின் கட்சித் தலைவர் கூட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

கோவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தி 15

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. வைத்திலிங்கம் பிரபாகரன்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
## தமிழினி பிரபாகரன்
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி

(7990)

# கொடிகாமத்தில் இளைஞன் மீது கத்திக்குத்து

(சாவகச்சேரி)

கொடிகாமம் பகுதியில் வானில் வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் ஒன்று, இளைஞன் ஒருவர்மீது கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பி சென்றுள்ளது.

கொடிகாமம் கரம்பகம் பகுதியைச் சேர்ந்த 31 வயது இளைஞன் ஒருவரே கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வான் ஒன்றில் வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் நேற்று முன்தினம் இரவு 08 மணியளவில் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-03,30,33)

# கண்ணீர் அஞ்சலி

எமது அமைச்சின் உத்தியோகத்தர்
திரு. செ. மணிவண்ணன் அவர்களது அன்புத் தந்தை
## அமரர் கந்தையா செல்வம்
கடந்த 28.08.2021 ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.
மற்றும்
எமது அமைச்சின் உத்தியோகத்தர்
திருமதி றொ. தனுஜா அவர்களது அன்புத் தந்தை
## அமரர் கந்தசாமி அருணாசலம்
கடந்த 20.09.2021 ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

அன்னார்களது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(7987)

நலன்புரிச் சங்கம்
விவசாய அமைச்சு – வட மாகாணம்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 - 06 - 1977



மறைவு 22 - 09 - 2021

திருமதி **தமிழினி பிரபாகரன்**
[அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் – வலி. தெற்கு, உடுவில்]

எமது அலுவலகத்தில் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் திருமதி **தமிழினி பிரபாகரன்** நேற்று (22.09.2021) புதன்கிழமை இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7988)

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்
நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம் - வலி. தெற்கு, உடுவில்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 19.03.1942
அமரர்
விண்ணில் 25.08.2021
## இராஜேஸ்வரி நாகலிங்கம்
கள்ளிதெரு, தங்கோடை, காரைநகர் மேற்கு.

அன்புத் தாயே!
மாதம் ஒன்று ஆனாலும் தங்கள் நினைவுகள் என்றும் மறக்கமுடியாதது.
இவ்வுலகில் தங்கள் செல்வங்கள் சிறப்பாக வாழ தெய்வமாக இருந்து வழிகாட்டிய தாயே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் பூக்களால் அஞ்சலி செய்கின்றோம்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "

ஓம் சாந்தி!

"பத்ம பவளம்"
வதிரி, கரவெட்டி.

நடராசா கணேசமூர்த்தி
குடும்பத்தினர்

(C-2686)

# ஆழ்ந்த இரங்கல்கள்



அமரர்
## மார்க்கண்டு சோமேஸ்வரானந்தம்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்!

மயிலிட்டி அன்னையின் மடியில் பிறந்து இயற்கை அன்னையின் சொற்பனம் நிறைந்த அழகான கிராமமது காங்கேசன்துறையில் வாழ்ந்து தற்போது சென்னையில் தனது குடும்பத்தினருடன் சிறப்பாக வாழ்ந்து வந்து கடந்த 21.09.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று காலனின் கட்டளையில் அமைதியாய் போனதொரு சிரித்த முகமுடையவர்.

இவர் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் 1970 ஆம் ஆண்டு பிரிவு பாதுகாப்பு உத்தியோகத்தராக இணைந்து பின்னர் சாஜனாக இருந்து எம்மோடு தோளோடு தோள் நின்று காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம், Lanka Cement நிறுவனம், துறைமுக பகுதி மற்றும் Harbour View Hotel ஆகியவற்றில் இரவு, பகல் பாராது தன்னையே அர்ப்பணித்து சேவையாற்றிய அன்னாரை இந் நேரத்தில் அன்புடன் நினைவு கூர்ந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

முன்னாள் பாதுகாப்பு நிறைவேற்று அதிகாரி
திரு. க. தர்மகுலசிங்கம் மற்றும் குடும்பத்தினர்
1970 ஆம் ஆண்டு பிரிவு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

(C-2685)

# கொவிட் வைரஸ் எதிர்காலத்தில் வலுவிழக்கும்

## தடுப்பூசியை உருவாக்கிய பேராசிரியர் சாரா



**(லண்டன்)**

**கொவிட் 19 வைரஸ் பலவீனமடைந்து இறுதியில் சாதாரண தடிமனை ஏற்படுத்தும் வைரஸாக மாறிவிடும் என ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை உருவாக்கிய பேராசிரியர் டாம் சாரா கில்பர்ட் தெரிவித்துள்ளார்.**

கொவிட் எதிர்காலத்தில் மிகவும் கொடிய வைரஸாக மாறும் வாய்ப்பில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நோய் எதிர்ப்புச் சக்தியை மீறி தொடர்ந்து ஆபத்தான வைரஸாக கொரோனா இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் ஏற்கனவே நான்கு வெவ்வேறு வகையான கொரோனா வைரஸ்களுடன் வாழ்கிறோம். தற்போது பரவும் சார்ஸ்-கோவி -2 வைரஸும் வலுவிழந்து அவற்றில் ஒன்றாக மாறும்.

ஆனால் சார்ஸ்-கோவி - 2 வைரஸ் வலுவிழந்து சாதாரண தடிமனை ஏற்படுத்தும் வைரஸாக மாற எவ்வளவு காலம் எடுக்கும்? அதுவரை அதனைக்கையாள என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்பதே தற்போதைய கேள்வி எனவும் அவர் குறிப்பிட்டார்.

59 வயதான பேராசிரியர் டாம் சாரா கில்பர்ட் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஜென்னர் நிறுவன தடுப்பூசி ஆய்வு அணியை வழிநடத்தியவராவார்.

இந்த நிறுவனமே ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ரா ஜெனேகா கொவிட் -19 தடுப்பூசியை உருவாக்கியது. இது உலகில் மிகவும் பரவலாக விநியோகிக்கப்படும் தடுப்பூசியாக உள்ளது.

இதேவேளை, எதிர்கால தொற்றுநோய்களைத் தடுக்க தேவையான ஆய்வுகளை மேற்கொள்ள நிதியைப் பெற்றுக் கொள்ள போராடுவதாக பேராசிரியர் சாரா கில்பர்ட் குறிப்பிட்டார். உலகம் முழுவதும் பரவும் பிற தொற்று நோய்களைத் தடுக்க வைரஸ்கள் குறித்து ஆய்வுக்காக அவசர முதலீடு தேவை என்றும் அவர் கூறினார். (நி-5)

## தடுப்பூசி பாதிப்பை குறைக்கும்; தடுக்காது

## எதிர்வரும் வாரங்களில் மற்றொரு உச்சம் ஏற்பட 60 வீத வாய்ப்பு - பேராசிரியர் சுனத்

(கொழும்பு)

கொரோனா வைரஸின் டெல்டா பிறழ்வின் உச்சம் இப்போது இலங்கையில் முடிந்துவிட்டபோதும் எதிர்வரும் வாரங்களில் மற்றொரு உச்சம் ஏற்பட இன்னும் 60 வீத வாய்ப்பு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, மற்றொரு பெரிய உச்சத்தைத் தடுக்க, மக்கள் எப்போதும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டுமென சமூக மருத்துவப் பேராசிரியர், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுனத் அகம்பொடி ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாக பொது நடமாட்டம் கடுமையாக குறைந்துள்ளதால், நாட்டில் இறப்புகள் மற்றும் நோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் மிகவும் தொற்றக்கூடிய டெல்டா வகையின் உச்சம் முடிந்துவிட்டதாக சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர்.

எனினும், ஏனைய நாடுகளில் இருக்கும் கடுமையான பிறழ்வுகளுடன் வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் மற்றொரு உச்சம் ஏற்பட இன்னும் 60வீத வாய்ப்புள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் எப்போதும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தடுப்பூசிகள் கொரோனா பரவுவதைத் தடுக்கலாம் என்ற தவறான பாசாங்கு மூலம் தவறாக வழிநடத்தப்படக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசி கொரோனாவால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்குமே அன்றி கொரோனா பரவலைத் தடுக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ‘இனப்படுகொலையாளி கோட்டா’ அதிர்ந்தது நியூயோர்க் நகரம்







(நியூயோர்க்)

அமெரிக்காவில் இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷ என தெரிவித்து அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களே நியூயோர்க் நகரில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றியிருந்தார்.

இந்தநிலையில் மேற்படி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளதுடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளை கண்டறியுமாறும், அரசியல் எதிரிகளை அடக்குவதை உடனடியாக நிறுத்துமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(நி-5)

## திலீபனுக்கு அஞ்சலி செய்தமைக்காக கஜேந்திரன் கைதானது கண்டனத்துக்குரியது

### சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செய்தமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சர்வதேச நியமங்களுக்கும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கும் அமைவாக விதித்துரைக்கப்பட்ட சிறப்புரிமைகளுக்கு உரித்துடைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன் இனத்திற்காக உயிர்த் தியாகம் செய்த தியாகச் செம்மல் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செய்தமைக்காக ஆயுதமுனையில் அதியுச்ச வன்முறைப் பிரயோகங்களோடு கைது செய்யப்பட்டுள்ளமை இந்த அரசின் கோர முகத்தை இன்னுமொரு முறை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது அவரது சிறப்புரிமைகளை மீறும் வகையில் இந்த ஜனநாயக நாட்டில் இத்தனை மோசமான அரச வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமையானது இங்குள்ள சாதாரண தமிழர்களின் இயல்பு வாழ்வுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை தெட்டத்தெளிவாக காண்பித்துள்ளது.

தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அமைதியான முறையில் அஞ்சலி செய்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை ஒரு குற்றவாளியைப் போல் வலுக்கட்டாயமாகப் பொலிஸார் கைது செய்தமைக்கு எனது வலுவான கண்டனங்களைப் பதிவு செய்வதுடன் அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3,18,33)

# ஐதராபாத்தை வீழ்த்தியது டெல்லி



ஐ.பி.எல். இருபது -20 லீக் தொடரின் 33 ஆவது லீக் போட்டியில், டெல்லி கபிடல்ஸ் அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், டெல்லி கபிடல்ஸ் அணியும் சன்ரைசஸ் ஐதராபாத் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசஸ் ஐதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசஸ் ஐதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அப்துல் சமாட் 28 ஓட்டங்களையும் ரஷித் கான் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெல்லி அணியின் பந்து வீச்சில், ரபாடா 3 விக்கெட்டுகளையும் நோட்ஜே மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 135 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய டெல்லி கபிடல்ஸ் அணி, 17.5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் டெல்லி அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

இதன் போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் ஷிகர் தாவன் 42 ஓட்டங்களையும் ரிஷப் பந்த் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஐதராபாத் அணியின் பந்து வீச்சில், காலீல் அஹமட் மற்றும் ரஷித் கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக டெல்லி அணி சார்பில், 2 விக்கெட்டுகளை வீழ்த்திய ஹென்ரிச் நோட்ஜே தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

## ஐதராபாத் அணியின்
# வேகப்பந்து வீச்சாளர் நடராஜனுக்குக் கொரோனா



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான தமிழ் நாட்டின் டி.நடராஜனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

ஐ.பி.எல். போட்டியின் இரண்டாம் பாகப் போட்டிகள் தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்காக விளையாடி வரும் நடராஜனுக்கு கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் அவர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

நடராஜன் இடம்பெறாமை ஐதராபாத் அணியின் பந்து வீச்சுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

அந்த அணியின் புவ்னேஷ்வர் குமார், சந்தீப் ஷர்மா, ரஷீத் கான், மொஹமட் நபி என சிறந்த பந்துவீச்சு பட்டாளம் இருப்பதால் எதிரணியை அவர்களால் சமாளிக்க முடியும் எனவும் கூறப்படுகிறது. எனினும், போட்டியின் கடைசி ஓவர்களை சிறப்பாக வீசக்கூடிய நடராஜன் இல்லாதமை சன் ரைசர்ஸ் அணிக்கு பெரும் இழப்பாகும். (4-6)




# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2411

### பாத்திமா

ஆசியாவின் ஆச்சரியம் என்றால் என்ன மன்னா?



அத்தியாவசிய பொருட்களை பின் கதவாலும் அதி விஷேசங்களை முன் கதவாலும் விற்பனை செய்வது - அமைச்சரே

### தாரணி



நமக்கு பாடம் நடக்குது இல்ல Bio, Maths வகுப்புக் போய் பாப்பம்...



சே வேணாம்.. அவனுக எப்ப பாரு படிப்பு கத கதச்சிட்டு இருப்பானுக..

### பிரணவன்



ஒரு வேளை இலங்கைல Data தட்டுப்பாடு வந்தா என்னடா பன்னுவ




சேகர் செத்துருவான்

### பார்த்தீபன்



ஜனாதிபதி அமெரிக்காவில்...



பிரதமர் இத்தாலியில்...




Tour முடிஞ்சதும் கப்பல்ல ஏத்தி கடல் வழியா அனுப்பி வைங்க

### யாமினி

சைனாக்காரன் தயாரிப்பில் One day மாஸ்க்தான் திறம்



ஒரு கிழமைக்கு மேல உழைக்குதப்பா

### கஜா

உருவாகிறது "லங்கா கேஸ்"புதிய உள்நாட்டு சமையல் எரிவாயு நிறுவனம்.



மஞ்சளை சிவப்பா மாத்தினா புது நிறுவனமாடா?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொண்டால் ஒரு வருடத்தில் இயல்பு நிலைக்குத் திரும்பலாம்

## மொடர்னா மருந்தாக்கல் நிர்வாகத் தலைமை அதிகாரி

**(கொழும்பு)**

**தடுப்பூசிகளின் உற்பத்தியை அதிகரித்து உலகம் முழுவதும் தடுப்பூசி விநியோகத்தை உறுதி செய்தால் ஒரு வருடத்தில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் நெருக்கடிக்கு முடிவு கண்டு உலகம் இயல்புக்குத் திரும்ப முடியும் எனக் கருதுவதாக மொடர்னா மருந்தாக்கல் நிர்வாகத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஸ்டீபன் பான்செல் தெரிவித்துள்ளார்.**

தடுப்பூசி உற்பத்திகளை அதி கரித்தால் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் போதிய அளவு தடுப்பூசிகள் கிடைக்கும். இதன் மூலம் உலகில் உள்ள அனைவருக்கும் தடுப்பூசி போட முடியும். தேவையான அளவு பூஸ்டர் தடுப்பூசிகளையும் வழங்குவதை சாத்தியமாக்க வேண்டும் எனவும் சுவிஸ் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஸ்டீபன் பான் செல் கூறியுள்ளார்.

அத்துடன், சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும் எனவும் அவா? குறிப்பிட்டார்.

தடுப்பூசி போடாதவர்கள் கூட தாமாகவே விரைவில் தடுப்பூசி போடுவார்கள். ஏனென்றால் டெல்டா திரிபு வைரஸ் வேகமாகத் தொற்றக்கூடியது. தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால் சாதாரண காய்ச்சல்போன்ற விளைவுகளுடன் நெருக்கடியில் இருந்து வெளியேறலாம்.

அடுத்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் உலகம் இயல்பு நிலைக்கு திரும்புமா? என்று கேட்டதற்கு, ஒரு வருடத்தில் இது சாத்தியமாகலாம் என நான் கருதுகிறேன் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கொரோனாவிலிருந்து மீண்டவர்களுக்கு நரம்பியல் நோய் ஏற்படுவதற்கு வாய்ப்பு

## நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றில் இருந்து மீண்டவர்களில் 3% முதல் 40% வரை நரம்பியல் நோய் அறிகுறிகளை உருவாக்கும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

நரம்பியல் நோய் அறிகுறிகள் கடுமையாக இருந்தால் மருத்துவரை நாடுவது மிகவும் முக்கியம் என நரம்பியல் நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் காமினி பத்திரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தஏராளமானோர் உள்ளனர். அவர்களுக்கு இந்த நோய் அறிகுறிகள் வந்தால் அறிந்து கொள்வதற்காக இதனை தெரிவிக்கின்றோம்.

மேலும் இந்த அறிகுறிகளைப் பற்றிக் கேட்டு அச்சப்படத் தேவையில்லை. பெல்ஸ் ஃபால்ஸ் என்ற நோயினால் முகத்தின் ஒரு பக்கம் உணர்ச்சியற்றதாக மாறும்.

இந்த நாட்களில் இது மிகவும் அதிகரித்துள்ளது. கொரோனாக் காரணமாக இது ஏற்படுகின்றதா?என்று சந் தேகம் எழுந்துள்ளது. கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களில் 3% முதல் 40% வரை நரம்பியல் நோய் அறிகுறிகள் ஏற்படு வதாக தெரிவிக்கப்படுகின்றது". என அவர் தெரிவித்தார். (நி-5)



**அமைச்சரவை உத்தியோக பூர்வ அந்தஸ்துடன் இந்தியாவிற்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொரகொட நேற்று முன்தினம் டில்லியில் இந்திய ஜனாதிபதி ஸ்ரீராம் நாத் கோவிந்திடம் தனது சான்றிதழ் பத்திரங்களை கையளித்தார்.**

# அத்தியாவசிய காரணங்களுக்காக மட்டும் இலங்கைக்குச் செல்லுங்கள்

## பிரித்தானியா அறிவுறுத்தல்

(கொழும்பு)

அத்தியாவசிய காரணங்களுக்காக மட்டும் பிரித்தானியர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொதுநலவாயச் செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

கொவிட் பரவல் நிலையைக் கருதி இலங்கையை சிவப்பு பட்டியலில் வைத்திருந்த பிரித்தானியா, நேற்று முன்தினம் முதல் அந்தப் பட்டியலிலிருந்து இலங்கையை நீக்கியது. எவ்வாறாயினும், குறுகிய அறி விப்பின் பேரில் இலங்கையில் பய ணத்தடைகள், ஊரடங்கு சட்டம் என்பன ஏற்படுத்தப்படும் என்பதோடு, விமானப்பயணங்களிலும் மாற்றம் ஏற்படக்கூடும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிரித்தானியர்கள் இலங்கைக்கு அத்தியாவசியக் காரணங்களுக்காக மட்டும் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழுஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி பத்மலோசனி சற்குணமூர்த்தி அவர்களின் அன்புத்தாயார்

திருமதி.**இரத்தினம் குணலட்சுமி**

அவர்கள் 19.09.2021 அன்று சிவபதமடைந்தார்.
அவர்களின் பிரிவுத்துயரால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.



**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.**

(C-2684)

# மரண அறிவித்தல்

## திருமதி பூபாலசிங்கம் இரத்தினமலர்



**பிறப்பு: 19.04.1950**
**இறப்பு:21.09.2021**

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மற்றும் வவுனியா உக்குளாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் இரத்தினமலர் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோகரத்தினம் செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் சுமதி (சுவீடன்), அகிலன் (கனடா), சுதர்சன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின்பாசமிகு தயாரும், மகேந்திரன் (சுவீஸ்), காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், சிவயோகநாதன் மற்றும் கமலநாதன், கணேசநாதன், சண்முகநாதமுதலி, சிறி பத்மநாதன், நல்லைநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியை 22.09.2021 கடந்த புதன்கிழமை உக்குளாங்குளத்தில் நடைபெற்றது.

வவுனியா (7983) குடும்பத்தினர் 076 896 4962

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 1923 – 12 – 23



இறப்பு 2021 – 08 – 25

அமரர். **வல்லிபுரம் செல்லாச்சி**

(குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் மடத்தடி வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

கடந்த 25.08. 2021 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் **வல்லிபுரம் செல்லாச்சியின்** அந்தியேட்டிக் கிரியைகள் 23.09.2021 நேற்று வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. மதிய போசன நிகழ்வுகள் 24.09.2021 இன்று வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

**மடத்தடி வீதி, கொடிகாமம்.** (7964) **குடும்பத்தினர்**

## 4 வருடங்களின் பின்

# நாவற்குழி சாவக்கோட்டையில் காணி மோசடி அம்பலம்

## பாதிக்கப்பட்டவர்கள் போராட்டம்



(சாவகச்சேரி)

நாவற்குழி-சாவக் கோட்டை கிராமத்தில் இடம் பெற்ற காணி மோசடிச் சம்பவத்தால் 42 குடும்பங்கள் பாதிப்படைந்ததுடன் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2017ஆம் ஆண்டளவில் நாவற்குழி-சாவக் கோட்டை கிராம மக்கள் சிலர் கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தில் அங்கத்தவராக தம்மை பணம் கட்டி பதிவு செய்திருந்தனர்.

அவ்வாறு பணம் செலுத்தி அங்கத்துவ உரிமைச் சான்று கிடைக்கப்பெற்றவர்களுக்கு சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் வரை பெற்று நாவற்குழி பகுதியில் வீட்டுத்திட்ட சங்கத்தின் பெயரைப் பாவித்து தனியார் சிலரால் காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை வேறு சிலர் உரிய ஆவணங்களுடன் குறித்த காணிகளை தமது காணி என உரிமை கோரிய போதே அம் மக்கள் தாம் ஏமாற்றப்பட்டதனை உணர்ந்து எதிர்ப்பினையும் வெளியிட்டனர்.

காலாகாலமாக நாவற்குழி-சாவக்கோட்டையில் வசித்து வரும் தமக்கு இதுவரை அரசாங்கத்தால் காணியோ/ வீடோ வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும் 90 பரப்புக் காணியே இவ்வாறு மோசடி செய்து அப்பாவிப் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30)

# கோண்டாவில் வன்முறைச் சம்பவம்; சந்தேக நபர்கள் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் இடம் பெற்ற வன்முறையில் ஒருவருக்கு கை துண்டாடப்பட்டும் மேலும் 6 பேர் படுகாயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் சந்தேக நபர்கள் மூவரும் முற்படுத்தப்பட்ட போது, கோப்பாய் பொலிஸார் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத நிலையில் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது.

கடந்த ஜுன் 30 ஆம் திகதி கோண்டாவிலில் வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த 7 பேரை கூரிய ஆயுதங்களினால் தாக்கி படுகாயம் விளைவித்தும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களை தாக்கிச் சேதப்படுத்தியும் தீவைத்தும் வன்முறையில் ஈடுபட்டதாக கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பி அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் ஏற்கனவே யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய 3 சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன்தினம் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

சந்தேக நபர்கள் மூவரை பிணையில் விடுவிக்க அவர்களது சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை மன்றில் முன் வைத்தார். பிணை விண்ணப்பத்துக்கு மன்றில் தோன்றியிருந்த கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அதனால் சந்தேக நபர்கள் மூவரையும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 ஆட்பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (4-7-33)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## நவக்கிரக தோஷம் நீக்கும் மகாளய அமாவாசை



**பித்ருக்களின் ஆசீர்வாதம் நமது குலத்தைக் காக்கும் என்பார்கள். அனைவரும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு முதலில் பித்ருக்களை திருப்தி செய்ய வேண்டும். மகாளய பட்சக் காலத்தில் ஏதேனும் ஒரு கோவிலில் உள்ள புனித தீர்த்தம், நதிக்கரை, குளக்கரைகளில் அமர்ந்து தர்ப்பணம் செய்வதால் பித்ருக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து நேரடியாக நாம் வழங்குவதை பெற்றுக் கொண்டு ஆசி வழங்குவார்கள். தேவர்களின் வருடக் கணக்குப்படி அவர்களுக்கு புரட்டாதி மாதம் நடுராத்திரி வேளையாகும்.**

**இந்த நேரத்தில் அமைதியாக இருக்கும், நிசப்தம் நிலவும். எனவே தேவர்களை ஆராதிப்பதற்கும், பித்ருக்களை உபசரிப்பதற்கும் இதுவே சிறந்த காலமாக கருதப்படுகிறது.**

**நோன்பு இருப்பது எப்படி?**

**மகாளய அமாவாசையன்று காலையில் எழுந்து வீட்டை சுத்தப்படுத்த வேண்டும். பின்னர் குளித்து முடித்து அருகில் உள்ள கோவில்களில் இருக்கும் நீர்நிலைகளிலோ அல்லது கடற்கரைப் பகுதியிலோ சென்று பிதுர் தர்ப்பணம் செய்ய வேண்டும்.**

**அன்று முழுவதும் உபவாசம் இருந்து முன்னோர்களை நினைத்து வழிபட வேண்டும். அவர்களுக்கு பிடித்த உணவு பதார்த்தங்களை நைவேத்தியமாக படைத்து இறைவனை வணங்க வேண்டும்.**

(தொடரும்)



காங்கேசன்துறை-769 பயணிகள் சிற்றூர்தி சேவை உரிமையாளர்களின் வரையறுக்கப்பட்ட கம்பனியைச் சேர்ந்த சிற்றூர்திச் சாரதி, நடத்துநர்களின் 72 குடும்பங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: ரவிசாந்)

# மின் மயானம் அமைக்க சாவ. நகரசபைக்கு அனுமதி

(சாவக்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின் மயானம் ஒன்றினை அமைப்பதற்கு வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சாவகச்சேரி நகரசபைக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில் அதற்கான நிதி மூலத்தை கண்டுபிடிக்கும் முயற்சியில் நகரசபையினர் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் கருத்து தெரிவிக்கையில், தற்போது நாட்டில் நிலவும் கொரோனா அபாய நிலையால் உயிரிழப்பவர்களை மின் தகனம் செய்ய வடக்கில் போதியளவு மின் தகன சாலைகள் இல்லை.

இதனால் வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அண்மையில் வடக்கில் உள்ள சில உள்ளூராட்சி சபைகளை அழைத்து மின் தகன சாலைகள் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடியதுடன், மின் தகனசாலை அமைப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மின் தகன சாலை அமைப்பதற்கு 13 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படும் நிலையில் அதனைப் புலம்பெயர் தமிழ் உறவுகளிடம் இருந்து பெற்று உடனடியாக தகன சாலை ஒன்றை நிறுவ எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார். (4-7-30)

# நாட்டில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## 800 கொள்கலன்கள் துறைமுகத்தில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

**இலங்கையில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக உணவு இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.**

உணவு இறக்கும தி யாளர்கள் சங்கத்தின் ஊட கப் பேச்சாளர் நிஹால் செனிரத்ன இதனைத் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிவந்த சுமார் 800 கொள்கலன்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களின் பங்குகளை விடுவிப்பதன் மூலம் எதிர் வரும் மாதங்களில் ஏற்படக் கூடிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.

இல்லையேல் அனைத்து இறக்குமதிகளும் நிறுத்தப்படுவதுடன், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஒக்டோபர் மாத இறுதிவரை மட்டுமே போதுமானவையாகக் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு 3 மணித்தியாலங்களில் பி.சி.ஆர். முடிவு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு 3 மணித்தியாலங்களில் பி.சி.ஆர். பெறுபேற்றை வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட ஆய்வுகூட கட்டமைப்பு நேற்று வியாழக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாளை சனிக்கிழமை முதல் இதனூடாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரி வித்துள்ளார்.

பி.சி.ஆர். பெறுபேறுகள் கிடைக்கப் பெறும் வரையில் கட்டாயமாக விடுதிகளில் தனிமைப்படுத்தப்படுவோரிடம் அதிக கட்டணங்கள் வசூலிக்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவியுங்கள்

### பாராளுமன்றத்தில் மனோ கணேசன்

(கொழும்பு)

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்து, பொறுப்பு கூறும் கடப்பாட்டை சர்வதேசத்திற்கு முன்பாக நிறைவேற்றும்படி ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறையில் அண்மையில் நடந்த சர்ச்சைக்குரிய சம்பவம் பற்றி விசாரணை நடத்த அரசாங்கத்தால் அமைக்கப்படும் குழு ஊடாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை பரிந்துரைக்கும்படி அவர் வலியுறுத்தினார். (நி-5)


மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும் 05.09.2021




திருமதி. மரியகசிலா இக்னேசியஸ்
பகுதித்தலைவர், ஆரம்பக் கல்வி. SLTS-1, Primary Trained), B.A, PGDE (University of Jaffna)

சேவைக்காலம்

| | |
|---|---|
| யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்- | 1990.03.22-1995.01.03 |
| யா/ புனித மரியாள் வித்தியாலயம்- | 1995.01.04-2010.02.21 |
| யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்- | 2010.02.22-2014.09.02 |
| கொ/ மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயம்- | 2014.09.03-2017.04.03 |
| யா/ ஒஸ்மானியாக் கல்லூரி- | 2017.04.04-2021.09.04 |

சேவை நலன் பாராட்டு

செந்தமிழும் கிறிஸ்தவமும் இணைந்த பண்பும்
செந்திருவின் பொலிவும்
குரு பணியே உயர் நோக்கமாக
அந்தமில்லா கல்விக்கு ஒளி விளக்காய்
மூன்று பத்து ஓராண்டு பணிபுரிந்து
சேவை பூர்த்தி செய்தீர்!

ஆசிரியர் கலாசாலை முதல்வரின்
அன்புமிகு மனையாளாய்
ஆசைமிகு பிள்ளைச் செல்வங்களின்
பாசமிகு தாயாக
பேரப்பிள்ளையின் மழலையில்
நனைந்த நீவீர்!
ஒஸ்மானியாக் கல்லூரியில் பகுதித்
தலைவராகப் பணிபுரிந்து
ஆரம்பக்கல்வியின் அத்திவாரமாகத் திகழ்ந்தீர்!

எமது மாணவச் செல்வங்களின்
கையெழுத்துப் பொறிமுறையில்
உங்கள் முறுவலித்த முழு
முகத்தைக் காண்கின்றோம்
நேரகாலம் பாராது அயராது பணிபுரிந்து
அகவை அறுபதை அடைந்து விட்டீர்!

உங்களின் ஓய்வுக்காலம் பிணியின்றி
நலமுடனும் வளமுடனும்
என்றென்றும் இனிதாக
இறைவன் ஆசியும் அருளும்
உண்டாக இறைவனை வேண்டுகிறோம்!
வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழியவே!

(7981)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/ ஒஸ்மானியாக் கல்லூரி.



பிறந்த நாள் வாழ்த்துக்கள்

திருமதி. பத்மமலர் சிவகடாட்சம்
(யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலய உப அதிபர்)



எமது பாடசாலையில் இருபது வருட சேவைக் காலத்தில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக இருந்து பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு வர அயராது உழைத்து 60 ஆவது அகவை நிறைவு காண்கின்ற தங்களை அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் தங்களின் ஓய்வுக்காலம் சிறப்படையவும் வாழ்த்துகின்றோம்.

(7948)

பாடசாலைச் சமூகம்
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

# உலகளவில் கொரோனாவினால்
# 23 கோடி பேர் பாதிப்பு
# முதலிடத்தில் அமெரிக்கா

(வோஷிங்டன்)

**உலகளவில் இதுவரை கொரோனாத் தொற்றினால் பாதித்தவர்கள் எண்ணிக்கை 23 கோடியாக அதிகரித்துள்ளது. தொற்றுப் பாதிப்பில் முதலிடத்தில் இருக்கும் அமெரிக்காவில் கொரோனாவால் 4.25 கோடி பேர் பாதித்திருப்பதாகவும் 6.81 இலட்சம் பேர் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியாவில் 3.35 கோடி பேர் கொரோனாவால் பாதிப்படைந்துள்ளனர். 4.45 இலட்சம் பேர் நோயின் தீவிரத்தால் பலியாகியுள்ளனர்.

அதற்கு அடுத்தடுத்த இடங்களில் கொரோனா அதிகம் பாதித்த நாடுகளாக பிரேசில், இங்கிலாந்து , ரஷியா , பிரான்ஸ் , துருக்கி அர்ஜென்டினா, ஈரான், கொலம்பியா ஆகிய நாடுகள் உள்ளன.

மேலும் உலகம் முழுவதும் நோயின் தாக்கத்தைக் குறைக்க உருவாக்கப்பட்ட தடுப்பூசிகள் இதுவரை 598.8 கோடி பேருக்கு செலுத்தப்பட்டுள்ளன.(4-7)



சீனாவில் கடந்த 21 ஆம் திகதி நிலவுத் திருவிழா இடம்பெற்றது.பௌர்ணமி நாளான அன்று, கொண்டாடப்படும் அறுவடை திருவிழா, அரசு விடுமுறைத் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில்,இரவு நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் நிலவு வழிபாடு நடைபெற்றது.

## அனைத்து நாடுகளுக்கும் பயணம் செய்து கின்னஸ் சாதனை



(வோஷிங்டன்)

உலகின் அனைத்து நாடுகளுக்கும் பயணம் செய்த இளம் வயது பெண் என்று அமெரிக்காவைச் சேர்ந்த லெக்சி அல்ஃபோர்ட் (வயது-23) கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். இவர் தனது 18 வயதிலேயே 70இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். (7-4)

# கொலரா நோயால் 2,423 பேர் பலி

(அபுஜா)

நைஜீரியாவின் கனோ மாகாணத்தில் இந்தாண்டு மார்ச் முதல் தற்போது வரை வயிற்றுப் போக்கால் 329 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு சுகாதாரத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது வரை 23 மாநிலங்களில் 67 ஆயிரத்து 903 பேருக்கு கொலரா நோய் தாக்கியிருப்பதாகவும் அதில் 2 ஆயிரத்து 423 பேர் பலியாகியிருப்பதாகவும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து நாட்டின் நோய்த் தடுப்புத்துறை அதிகாரி சிக்வே ஹெக்வேசு , " வயிற்றுப் போக்கால் பலியானவர்களில் 5 - 14 வயதுள்ள குழந்தைகளே அதிகம்.இறப்பு விகிதமானது ஆண்கள் 51 சதவீதமாகவும் பெண்கள் 49 சதவீதமாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது" என சில நாட்களுக்கு முன் தெரிவித்திருந்தார்.ஒழுங்கற்ற சுகாதாரம் , மக்கள் நெருக்கம் , கனமழையால் உருவான குட்டை நீர்கள் , குப்பைகள் நிறைந்த பகுதிகள் மூலம் கொலரா கட்டுக்கடங்காமல் பரவியிருக்கிறது என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# ஐ.நா.பொதுசபைக் கூட்டத்தில் பங்கேற்க தலிபான்கள் விருப்பம்

(நியூயோர்க்)

76 ஆவது ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க தலிபான்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். மேலும், ஐ.நா.வுக்கான ஆப்கான் தூதராக சுஹைல் ஷாஹீனை நியமித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரஸுக்கு தலிபான்கள் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாக இருந்த அஷ்ரஃப் கனி, கடந்த மாதம் 15 ஆம் திகதி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். அவரை உலக நாடுகள் இனியும் ஆப்கான் ஜனாதிபதியாக அங்கீகரிக்கவில்லை. எனவே, ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஆப்கானிஸ்தான் சார்பில் நாங்கள்தான் பங்கேற்க முடியும்.


ஐ.நா.வுக்கு முந்தைய அரசால் நியமிக்கப்பட்ட தூதர் கிராம் ஐசக்ஸாயின் பணிகள் நிறைவடைந்துவிட்டன.

எனவே, அவரை இனியும் ஆப்கானிஸ்தானின் பிரதிநிதியாகக் கருத முடியாது.புதிய தூதராக முகமது சுஹைன் ஷாஹீனை நியமித்துள்ளோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட அந்தக் கடிதம், 'ஆப்கான் இஸ்லாமிய அமீரகம்' என்ற முத்திரையின் கீழ், வெளியுறவுத் துறை அமைச்சர் அமீர்கான் முத்தக்கியின் கையொப்பத்துடன் ஐ.நா. பொதுச் செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக குட்டெரெஸின் துணை செய்தித் தொடர்பாளர் ஃபாஹான் ஹக் தெரிவித்தார்.

இந்த இரு தகவல்கள் குறித்தும் ஐ.நா. பொதுச் சபை தலைவருடன் ஆலோசனை நடத்திய பிறகு, 76 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தின் அமைப்புக் குழுவுக்கு இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (7-4)

# தடுப்பூசி சான்றிதழ்களை பரஸ்பரமாக அங்கீகரிக்க வேண்டும்- மோடி



(புதுடில்லி)

சர்வதேச பயணத்தை எளிதாக்கும் வகையில் அவர்களின் தடுப்பூசி சான்றிதழ்களை உலக நாடுகள் பரஸ்பரமாக அங்கீகரிக்க வேண்டும் என அமெரிக்காவில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

உலகளாவிய கொரோனாத் தடுப்பு உச்சி மாநாட்டில் காணொலி மூலம் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போது தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள் 95 நாடுகளுடனும், ஐ.நா. அமைதிப்படையுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இந்தியாவின் தடுப்பூசி உற்பத்தி அதிகரிக்கும் போது அவற்றை பிற நாடுகளுக்கும் வழங்குவது மீண்டும் ஆரம்பமாகும். பொதுமக்கள் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்றிதழ்களை உலக நாடுகள் பரஸ்பரமாக அங்கீகரிப்பதன் மூலம் சர்வதேச பயணம் எளிதாக்கப்பட வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார். (7-4)

# அமெரிக்காவில் பூஸ்டர் டோஸ் தடுப்பூசிக்கு அனுமதி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பூஸ்டர் டோஸ் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பைசர் நிறுவனத்தின் தடுப்பூசி கொரோனாவுக்கு எதிராக 91 சதவிகித செயற்திறன் கொண்டதாக உள்ளது. இந்த தடுப்பூசி அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் அவசரகால பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் பைசர் நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசிக்கு முழு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் பைசர் நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசியை பூஸ்டராக போட்டுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 65 வயதானவர்கள், நோய்த் தொற்று அபாயம் உள்ள இளைஞர்கள் 3ஆவது தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம் எனவும் முதல் 2 தடுப்பூசி போட்டுக் கொண்ட 6 மாதத்துக்கு பின் 3 ஆவது தடுப்பூசி போடலாம் என அமெரிக்கா அறிவித்துள்ளது. (7-4)

## ஒக்டோபர் முதல்

# கொவிட் தொற்றாளர்களை பராமரிக்க உறவினர்களுக்கு அனுமதி

## வவு.வைத்தியசாலை பணிப்பாளர்

(நெளுக்குளம்)

**கொரோனாத் தொற்றாளர்களைப் பராமரிக்க நோயாளர்கள் விடுதியில் உறவினர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் வவுனியா வைத்தியசாலையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளர் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நிலையில் உறவினர்கள் எவரும் அருகில் இருந்து பராமரிக்க அனுமதிக்கப்படாமையினால் நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் அதிகளவான மன அழுத்தத்திற்கு உள்ளாகி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுகாதார அமைச்சு இலங்கையில் முதற்கட்டமாக வவுனியா மற்றும் மொனராகலை வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்கு உறவினர்களை அனுமதிக்க திட்டமிட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி க. ராகுலனிடம் கேட்டபோது, வவுனியா வைத்தியசாலைக்கும் குறித்த நடைமுறை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து இந்த நடைமுறையை ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

நோயாளர்களின் உறவினர்களுக்கு ஒரு மணிநேர பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் கொரோனா விடுதிக்கு செல்வதற்கான பாதுகாப்பு அங்கிகள் முழுமையாக அணிந்து செல்ல அனுமதிக்கப்படுவர்.

அத்துடன் அனைத்து நோயாளர்களின் உறவினர்களையும் ஒரே தடவையில் அனுமதிக்க முடியாது. ஒரே தடவையில் மூவர் என்ற ரீதியில் அனுமதிக்கப்பட்டு அவர்கள் அனைத்து நோயாளர்களுக்கும் உதவும் வகையில் விடுதிக்குள் செல்வார்கள். இதனை ஒரு பொறிமுறையின் கீழ் செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (7-4-6-299)

# ஒரு தொகை மஞ்சள், ஏலக்காய் கௌதாரிமுனையில் மீட்பு

(தர்மபுரம்)

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை வெட்டுக்காட்டுப்பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2015 கிலோ 600 கிராம் மஞ்சளும் 36 கிலோ 100கிராம் ஏலக்காயும் மீட்கப்பட்டுள்ளது. இராணுவ புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பூநகரி பொலிஸாரும் இராணுவத்தினரும் சேர்ந்து குறித்த மஞ்சள், ஏலக்காய் என்பவற்றை மீட்டுள்ளனர். சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரை இன்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-4-6-316-315)

# மூன்று நாட்களில் 745 பேர் மாத்திரமே தடுப்பூசி பெற்றனர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இருபது வயது முதல் 29 வயதிற்குட்பட்ட 28 ஆயிரத்து482 பேர் தடுப்பூசி பெற்றுக் கொள்ள தகுதியுடைய நிலையில் கடந்த மூன்று நாட்களில் 745 பேர் மாத்திரமே தடுப்பூசிகளை பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 20 வயது தொடக்கம் 29 வயதுப் பிரிவினருக்குத் தடுப்பூசி ஏற்றும் பணி கடந்த திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 28 ஆயிரத்து 482 பேர் தடுப்பூசி பெற்றுக்கொள்ள தகுதியுடைய நிலையில் கடந்த மூன்று நாட்களில் 745 பேர் மாத்திரமே தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். (7-4-6-315)




# கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட மேலும் 25 பேருக்குத் தொற்று

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை, நொச்சிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 13 பேர் கொவிட் தொற்றாளர்களாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் இனங்காணப்பட்டனர்.

இதனையடுத்து குறித்த 13 தொற்றாளர்களுடன் தொடர்புடைய ஆலயம் மற்றும் 30 வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன. தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகிய நிலையில் மேலும் 25 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் சுமார் 100 பேர் வரையிலேயே வசித்து வரும் நிலையில், 38 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனால் கொவிட் அச்சுறுத்தல் மிக்கதாக குறித்த கிராமம் மாறியுள்ளதால் மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி அவதானமாக இருக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (7-4-6-250)



வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள், வவுனியா மாவட்ட கமநல சேவை நிலையங்களின் நிதிப்பங்களிப்பில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் நேற்று வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் க.ராகுலனிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)

# தேவாலயங்களுக்கு காணிகளை வழங்குவதைவிட மக்களின் பசியைத் தீர்ப்பதே முக்கியம்

## ஞானசாரதேரர்



(மன்னார்)

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கோயில் மோட்டை அரச காணியில் சுமார் 40 வருடங்களாக கோவில் மோட்டை பகுதி மக்கள் வேளாண்மை செய்து வருகின்ற நிலையில் குறித்த அரச காணியை தங்களுக்கு வழங்க வேண்டுமென கோவில் மோட்டை விவசாயிகள் உண்ணாவிரதம் உட்பட்ட பல போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த நிலையில், வடக்கு மாகாண ஆளுநரால் குறித்த காணியை கோயில் மோட்டை விவசாயிகளுக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

மறுபுறம் குறித்த காணி தங்களுக்கு வேண்டுமென மடு தேவாலய பரிபாலன சபையினர் கோரிவந்ததுடன் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் போன்றவற்றை நாடியதுடன் வடக்கு மாகாணத்திற்கு இருக்கும் அற்ப சொற்ப அதிகாரங் களையும் குறைக்கும் விதமாக நடந்து கொண்டனர்.

இந்நிலையில் தான் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கொரோனா இல்லாத இலங்கை உருவாக வேண்டுமென இடம்பெற்ற விஷேட பூஜையில் பங்கேற்க பொதுபல சேனா அமைப்பின் பொது செய லாளர்ஞானசாரதேரர் மன்னார் வந்த நிலையில் இடைவழியில் வழிமறித்த விவசாயிகள் தங் களின் காணிப்பிரச்சினையைத் தீர்த்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில் கோயில் மோட்டை வயல் காணிக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஞானசாரதேரர் தேவாலயங்களுக்கு காணிகளை வழங்கு வதைவிட மக்களின் பசியைத் தீர்ப்பதே முக்கியம் என தெரி வித்ததுடன், குறித்த காணியை கோயில் மோட்டை விவசாயிகளுக்கு பெற்றுத்தர தன்னால் ஆன நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (7-4-6-285)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2021-17.10.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்பூரி சிங்காரம்



**நினைத்ததை நினைத்த உடனேயே செய்ய நினைக்கும் கும்ப இராசி வாசர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்கிர இயக்கத்தில் விரயச் சனியாக சஞ்சரிக்கிறார். தனலாபாதிபதியான குருவும், விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். எனவே வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்யுங்கள். உடல்நலனில் கவனம் தேவை.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் மாதத் தொடக்கத்தில் நீச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டிருக்கும். எந்த ஒரு செயலையும் திட்டமிட்டு செய்ய இயலாது. எனவே முன்னெச்சரிக்கையோடு செயற்பட வேண்டியது அவசியம். பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.

### மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் சனி பகவான் விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். புரட்டாதி 11 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி வலிமை அடைகிறார். ஏழரைச் சனியில் இரண்டாவது சுற்று என்றால், பாதிப்பு குறைவாக இருக்கும். முதற் சுற்றோ, மூன்றாவது சுற்றோ நடைபெறுமேயானால் கவனத்துடன் செயல்பட வேண்டும். சனி பகவான் உங்களுக்கு இராசிநாதனாகவும் விளங்குவதால், அது வலுவடையும் நேரத்தில் ஒரு சில நன்மைகளையும் செய்வார்.

குடும்பத்தில் நீண்ட நாளாக நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடை

## உடல் நலனில் கவனம் தேவை

பெறும். வழக்குகள் சாதகமாகும். சில ருக்கு பணி நிரந்தரமாகும். குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு வேலை சம்பந்தமான முயற்சிகளை செய்தால் அது கிடைப்பதோடு உதிரி வருமானமும் வந்து சேரும்.

### புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 8 இல் உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் புதன் சஞ்சரிக்கிறார். உற




வினர்கள் வழியிலும், மாமன், மைத்துனர் வழியிலும் மனக் கசப்பு ஏற்படும். புரட்டாதி 17 ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். எனவே அதிகமான விரயங்கள் ஏற்படலாம். தொழிலில் ஒரு சிலருக்கு ஏமாற்றங்கள் ஏற்படும். இக் காலத்தில் எதையும் குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து முடிவெடுங்கள்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

புரட்டாதி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் பல வும் இல்லம் தேடி வரும். குறிப்பாக தொழிலில் இருந்த மந்தநிலை மாறும். துணிந்து சில முடிவுகள் எடுத்து வளர்ச்சி அதிகரிக்க வழிவகுத்துக் கொள்வீர்கள்.

வாடகை கட்டடத்தில் நடைபெறும் தொழில், சொந்த கட்டடத்திற்கு மாறும் சூழல் உருவாகும். ஆடை, ஆபரணம், வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

கணவன் - மனைவிக்குள் அன்பு மேலிடும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு அல்லது திருமணம் சம்பந்தமான முயற்சி கைகூடும். உங்கள் பெயரிலேயே சொத் துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணி புரியும் பெண்களுக்குத் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைப்பது அரிது.



**நட்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ நினைக்கும் மீன இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு நீச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். அவரோடு கூட லாபாதிபதி சனியும் இருக்கிறார். எனவே சென்ற

## தொழில் மற்றும் உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் உண்டு

மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாகவே இருக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் உண்டு.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கும், தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்கும் குரு பகவான், மாதத் தொடக்கத்தில் நீச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். லாபாதிபதி சனியோடு குரு சேர்வதால் 'நீச்ச பங்க ராஜயோகம்' ஏற்படுகின்றது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கடந்த சில மாதங்களாக தடைபட்டு வந்த காரியங்கள் துரித மாக நடைபெறும். வெளிநாட்டில் உள்ள முன்னணி நிறுவனங்களில் பணிபுரிய அழைப்புகள் வந்து சேர லாம்.

### மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் சனி பகவான் லாப ஸ்தானத்தில் தன் சொந்த வீடான மகரத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவர் புரட்டாதி 11 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். சொந்த வீட்டில் இருப்பதால் பொருளாதாரம் திருப்திகரமாகவே இருக்கும். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். தடைபட்டு வந்த காரியங்கள் தானாகவே நடைபெறும்.

சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி குறுக்கிடலாம். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து மகிழ்ச்சியை வழங்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும்.




### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். களத்திர ஸ்தானாதிபதியாக விளங்கும் புதன் வக்ர இயக்கத்திலும் இருக்கிறார். புரட்டாதி 17 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெற வாய்ப்பு உண்டு. கடமையைக் கண்ணும், கருத்துமாகச் செய்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக் கும். வெளிநாட்டில் இருந்து மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

புரட்டாதி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், 9 ஆம் இடத்திற்கு வரும்பொழுது சகோதரர்களால் நன்மை கிடைக்கும். தந்தை வழி உறவில் இருந்த பிரச்சினைகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வாடகை வீட்டில் வசிப்பவர்கள் சொந்த வீட்டிற்கு மாறும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றம், இடமாற்றம் வரலாம். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் கனிவு அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு மாதத்தின் பிற்பகு தியில் மகிழ்ச்சி கூடும். திறமைக்கான அங் கீகாரம் கிடைக்கும். அலுவலகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். (முற்றும்.)

## மருத்துவ ஆலோசனை தேவைப்படுபவர்கள்
# 247 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு, மருத்துவ ஆலோசனை தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ள விசேட இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

அதன்படி, எந்த நேரத்திலும் 247 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மருத்துவர் ஒருவரை தொடர்புகொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்தார்.




அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மருத்துவரை தொடர்பு கொண்டதன் பின்னர், நோயாளியின் நோய் நிலைக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# மருத்துவர் ஏலியந்த வைட் கொரோனாவால் பலி

(கொழும்பு)

பிரதமர் மஹிந்தராஜபக்ஷவின் முன்னாள் தனிப்பட்ட மருத்துவரான ஏலியந்த வைட் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கை நிமித்தம் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாமல் இருந்த இவர் கொரோனாவால் மரணமடைந்தார்.

கொரோனாவை ஒழிப்பதற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் இணைந்து நீர் நிறைந்த பானைகளை ஆற்றில் போட்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இலங்கை - இந்தியா
# வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.



நியூயோர்க் நகரில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, மாகாண சபை தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாட்டின் நெருக்கடி நிலையினை புரிந்து கொள்ளுங்கள் - டலஸ்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடக சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட அமைச்சர் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் என்ற வகையில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்க கூடிய உயர்ந்த பட்ச தீர்வை வழங்கிஉள்ளது. இதனை ஏற்றுக் கொள்ளுமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் பணிப் பகிஷ்கரிப்பை அரசாங்கம் குறைத்து மதிப்பிடவில்லை அதனால் நாட்டின் சிறுவர்களது கல்வி நடவடிக்கைகள் சீர்குலையும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என அனைத்து தரப்புகளையும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்
**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## நல்ல தீர்ப்பு

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். மிகவும் நல்லவர். ஒரு நாள் அரண்மனையில் விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது. அதிலே ஒரு வழக்கு. ஒரு விவசாயி வந்து புகார் கொடுத்தார்.

என்ன புகார் என்றால் அவர் வயலில் ஆடுகள் வந்து மேய்ந்து பயிரை அழித்து விட்டன.

நிறைய உழைத்து, செலவு செய்து, பயிரை உண்டாக்கி வைத்திருந்தேன். எல்லாம் போய்விட்டது. இனிமேல் நான் என்ன செய்யிறது? நீங்கள் தான் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும் என்றார் அந்த விவசாயி. அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டு பிடித்து அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வாங்க என்று உத்தரவு போட்டார் ராஜா.

சேவகர்கள் போனார்கள். அவரைக் கூட்டிட்டுக் கொண்டு வந்தார்கள். ராஜா விசாரிச்சு முடித்துவிட்டு தீர்ப்பு வழங்கினார். விவசாயி அடைந்திருக்கின்ற இழப்புக்கு ஈடாக உன்னுடைய ஆடுகளை அவரிடம் கொடுத்துவிட வேண்டியதுதான் என்று சொல்லிவிட்டார்.

அந்த மன்னருடைய மகன் இதைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். இந்தத் தீர்ப்பை இன்னமும் சிறப்பாக வழங்கலாமே என்று நினைத்தான். அப்பாவிடம் அதைச் சொன்னான். உடனே அந்த அரசர் சரி நீயே இதற்குச் சரியான தீர்ப்பு சொல் என்றார்.

அந்த இளவரசன் தீர்ப்பு சொல்கின்றான். உமது ஆடுகள் எல்லாவற்றையும் ஓர் ஆண்டு காலத்திற்கு அந்த விவசாயியிடம் ஒப்படைத்து விட வேண்டியது. அந்த ஒரு வருடத்துக்குள்ளே அந்த ஆடுகள் போடுகின்ற குட்டிகள், பால், எரு எல்லாம் விவசாயி எடுத்துக் கொள்ள வேண்டியது. ஒரு வருடத்துக்குப் பிறகு உமது ஆடுகளை நீ திரும்பி வாங்கிக்க வேண்டியது.

இதுதான் இளவரசன் சொன்ன தீர்ப்பு. இது சரியான தீர்ப்புத்தான். இனி எனது அரசு பொறுப்புகளை இளவரசன் வசம் ஒப்படைக்கிறேன் என்று சொல்லி ஒப்படைத்து விட்டாராம்.

தாவூத்நபி சுலைமான் நபி இவர்களுடைய சரித்திரத்திலே இந்த சம்பவம் காணப்படுவதாக ஒரு சகோதரி திருமதி எச்.கோரி இதை நமக்கு எழுதியிருக்கின்றார்கள். ஒரு தண்டனையைப் பெறுகிறவன் அதற்குப் பிறகு சமூகத்திலே நல்லவிதமாக வாழ வாய்ப்பு இருக்கின்ற மாதிரி அமைய வேண்டும் தீர்ப்பு. அதற்கு இது ஓர் உதாரணம்.

சில தீர்ப்புகள் எப்படி அமைந்து விடுகின்றது என்றால்... ஒரு தண்டனையை அனுபவித்து முடித்தவன் அதற்குப் பிறகு அவன் இந்தச் சமூகத்தில் நல்லவனா வாழ நினைத்தாலும் அதற்கு தகுதியில்லாதவன் என்கின்ற அளவுக்கு சூழ்நிலை அமைந்து விடுகின்றது. இது சிந்திக்க வேண்டிய ஒரு செய்தி. இன்னொரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் போட்டி வைத்தார். என்ன போட்டி என்றால் அரண்மனை வாசலில் ஒரு பெரிய நீச்சல் குளம். அதிலே நிறைய விஷப்பாம்புகள். எந்த இளைஞன் துணிச்சலாக அந்த நீச்சல் குளத்திலே குதித்து நீந்திக் கரையேறி வருகின்றானோ அவனுக்கு 100 ஏக்கர் நிலம் பரிசாக வழக்கப்படும்.

அது வேண்டாம் என்றால் 1000 ஆடுகள் பரிசாக வழங்கப்படும். அதுவும் வேண்டாம் என்றால் என்னுடைய மகளை கல்யாணம் செய்து கொள்ளலாம். இதுதான் மன்னருடைய அறிவிப்பு. பரி செல்லாம் நல்லாத்தான் இருக்கு. இருந்தாலும் பாம்புகள் உள்ள குளம் என்பது நல்லா இல்லையே. அதனால் யாரும் அதிலே குதித்து நீந்த முன்வரவில்லை.

இருந்தாலும் திடீர் என்று ஒரு இளைஞன் அந்த நீச்சல் குளத்திலே குதித்தான், நீந்தினான். ஒரு வழியாக கரையேறி வந்து விட்டான். மன்னருக்கு மிகவும் மகிழ்ச்சி. நீ தான் தைரியமான இளைஞன். வா இப்படி என்று கூப்பிட்டார். அருகில் வந்தான் அந்த இளைஞன் தண்ணீர் சொட்ட சொட்ட. உனக்கு 100 ஏக்கர் நிலம் வேண்டுமா? என்கின்றார் மன்னன். வேண்டாம் என்கின்றான்.

சரி அப்படி என்றால் 1000 ஆடுகள் வேண்டுமா? என்கின்றார். அதுவும் வேண்டாம் என்கின்றான். ஓ அப்படி என்றால் என் பெண் வேண்டுமா? என்கின்றார். அதுவும் வேண்டாம் என்கின்றான்.

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படி என்றால் உனக்கு என்னதான் வேணும் என்கின்றார். என்னைப் பிடித்து இந்த குளத்தில் தள்ளி விட்டவன் யார் என்று எனக்குத் தெரிய வேண்டும் என்றான்.



# சிறுவர் அரங்கம்

## சாயம் பூசிய நரி

நெற்குப்பை என்ற ஊரில், பெரிய காடு இருந்தது. அங்கு, ஒரு நரி வசித்து வந்தது.

இரை தேடி புறப்பட்ட நரி, வழிதவறி நகரத்துக்கு சென்றது. அங்கிருந்த நாய்கள் திரண்டு, பயங்கரமாக குரைத்து விரட்டின.

தப்பி ஓடிய நரி, ஒரு வீட்டுக்குள் நுழைந்தது. அது, துணிகளுக்கு சாயம் ஏற்றுபவன் வீடு.

வீட்டருகே, தொட்டியில் நீலச்சாயம் கலந்து வைத்திருந்தான். நாய்களுக்கு பயந்து, மறைவிடம் தேடிய நரி, நீலச் சாய தொட்டிக்குள் குதித்தது.

துரத்தி வந்த நாய்கள், நரியைக் காணாமல், பலமாக குரைத்தபடி ஓடிவிட்டன.

குரைப்பு அரவம் அடங்கியதும், மெல்ல வெளியே வந்தது நரி. சாய தொட்டியில் அமிழ்ந்து கிடந்ததால், அதன் உடல், நீல நிறமாகி விட்டது.

நாய்களின் கண்ணில் படாமல் காட்டுக்குள் ஓடியது. நீல நிறத்தில் ஓடிய விலங்கை கண்ட, சிங்கம், புலி, கரடி, யானை போன்ற பலசாலிகள் பீதி அடைந்தன.



"இது வழக்கமான காட்டு விலங்காக தெரியவில்லை. இதனுடன் பழக்கம் வைத்தால் ஆபத்து ஏற்படும்..." என பேசியபடியே ஓடி ஒளிந்தன.

அந்த அச்சத்தைப் புரிந்து கொண்ட நீல நரி, பலவீனத்தை சாதகமாக பயன்படுத்தி பிழைக்க தீர்மானித்தது.

ஓடி ஒளிந்த விலங்குகளை எல்லாம் கூவி அழைத்து, "சற்று நில்லுங்கள்... உங்கள் நலனைக் காக்கத்தான் வந்திருக்கிறேன் அநாவசியமாக அச்சப்பட வேண்டாம்" என, மிடுக் குரலில் பேசியது.

அறிமுகமான குரலாக இருந்ததால், விலங்குகள் ஓடுவதை நிறுத்தி, தயக்கத்துடன் நீல நரி பக்கம் வந்தன.

(தொடரும்)

# மகாபாரதம்

193



எந்த அரசன் பகைவனைத் தண்டத்தால் அடக்கவில்லையோ அந்த அரசன் அச்வத்ரி என்ற விலங்கு தன் கருவினால்அழிவது போல அழிவான். (அச்வத்ரி என்னும் விலங்கின் கருதாயின் வயிற்றைக் கிழித்துக் கொண்டுவெளியே வரும்) அரசன் நன்றாகப் பூவுள்ளதாக இருந்தும் கனியில்லாத மரம் போல திகழ வேண்டும்.

கனியுள்ளதாக இருந்தும்ஏற முடியாத மரம் போல இருக்க வேண்டும். பழுக்காமல் இருந்தும் பழுத்தது போல காட்சி தர வேண்டும். பகை வரும்வரை அஞ்சுவது போல காணப்பட வேண்டும்.

பகைவர் வந்து விட்டாலோ அஞ்சாமல் போரிட வேண்டும். வரும் துன்பத்தை முன்னதாக தெரிந்து கொண்டு அகற்ற வேண்டும்.

வந்த நன்மையை இழப்பதும், வராததற்கு ஏங்குவதும் அரசர்க்கு இயல்பு அன்று. பகைவருடன் சமாதானம் செய்து கொண்டோம் என அரசன் நிம்மதியாக இருக்கக் கூடாது.

அப்படி நிம்மதியாக இருப்பவன், மரத்தின் நுனியில் உறங்குபவன் போல் ஆவான். அதாவது மரத்தின் நுனியில் இருப்பவன் எந்நேரத்திலும் கீழே விழக் கூடும்.

அதுபோலப் பகைவரிடம் அதிக நம்பிக்கைக் கொண்டவனுக்கும் எந்நேரத்திலும் அழிவு ஏற்படக் கூடும். நண்பனிடத்தில் கூட அளவு கடந்த நம்பிக்கை கூடாது.

அதிக நம்பிக்கை ஆபத்துக்கு வழிவகுக்கும் என்பதை அரசன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆராய்ந்து பார்க்காமல் யாரிடமும் நம்பிக்கை கொள்ளக்கூடாது. பிறப்பினால் யாரும் நண்பனுமில்லை, பகைவனும் இல்லை. செயல்களால்தான் பகையும் நட்பும் ஏற்படுகின்றன.

ஆணவம் மிக்கவனும் நன்மை தீமை அறியாதவனுமான ஒருவன் உறவினனாய் இருந்தாலும் அரசாங்கத்திற்கு எதிராகநடந்துகொள்வானாயின் அவன் தண்டிக்கத்தக்கவன்ஆவான். பகைவன் இனிக்க இனிக்க பேசினாலும் விட்டுவிடக் கூடாது.

(தொடரும்)

சுதந்திரமான மனிதன் என்றால், தான் சிந்தித்ததைச் செய்து முடிக்கும் வலிமையுடையவன் என்று பொருள். – வால்டேர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐ.நாவில் ஜனாதிபதியின் உரை இலங்கையில் அரங்கேறுமா?

தீவிரவாதம், பயங்கரவாதம் என்ற சொற்பதங்கள் இன்றுவரை வரைவிலக்கணப் படுத்த முடியாதவையாக இருப்பதை அவதானிக்கலாம்.

இதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்தால், ஒரு தரப்புக்கு பயங்கரவாதமாக இருக்கின்ற அமைப்பு, இன்னொரு தரப்பின் உரிமைக்காகப் போராடுகின்ற அமைப்பாக உள்ளது.

இதனால்தான் பயங்கரவாதத்தை வரைவிலக்கணப்படுத்த முடியவில்லை.

இவையொருபுறமிருக்க, ஐ.நா பொதுச்சபையில் நேற்று முன்தினம் (22) இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றியிருந்தார்.

அந்த உரையின் பெரும்பகுதி கொரோனாத் தொற்றுத் தொடர்பாக அமைந்திருந்த துடன் இன, மத, பால் வேறுபாடின்றி அனைத்து மக்களையும் சமத்துவமாக நடத்துவோம் என்றும் கூறியிருந்தார்.

இதற்கு மேலாக உலக நாடுகள், இலங்கைக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்திருந்தார்.

இங்கு ஜனாதிபதி ஆற்றிய உரையில், அனைத்து மக்களையும் இன, மத, பால் வேறுபாடின்றி சமத்துவமாக நடத்துவோம் என்பதை ஒரு சிறுவிடயமாகக் கூறியிருந்தார் என்பது கவனிக்கத்தக்க விடயம்.

இருந்தும் பரவாயில்லை என்று அதனை பெரிதுபடுத்தாமல் விட்டுவிடலாம்.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறிய மேற்போந்த விடயம், அவர் ஐ.நா பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குச் செல்லும்வரை இலங்கையில் இம்மியும் அமுலாகவில்லை.

அப்படியானால் அவர் அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய பின்னரே இன, மத, பால் வேறுபாடின்றி சகல மக்களையும் சமத்துவமாக நடத்துகின்ற ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

இங்கு ஐ.நா சபையைச் சமாளிப்பதற்காக மட்டுமே ஜனாதிபதி கோட்டாவின் உரை அமைந்ததெனில், அந்த உரை தொடர்பாகப் பிரஸ்தாபிப்பதில் அர்த்தமில்லை.

மாறாக, உலகத் தலைவர்கள் கூடியிருக்கக்கூடிய ஐ.நா பொதுச்சபையில் ஜனாதிபதி, உண்மையாகவும் நேர்மையாகவும் இதய சுத்தியோடும் உரையாற்றியிருப்பாராயின்,

அவர் நாடு திரும்பியதும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். காணாமல்போனவர்களின் உறவினர்களை அழைத்து அவர்களின் துன்பத்தை தீர்த்து வைக்க வேண்டும்.

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தில் நடந்துள்ள நில ஆக்கிரமிப்புகள் முடிவுறுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் பௌத்தத்தைப்போல் ஏனைய மதங்களுக்கும் உயர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

தவிர, இந்நாட்டின் ஜனாதிபதியாக – பிரதமராக தமிழர் இருக்க முடியும் என்றவாறு அதிகாரங்களும் உரிமைகளும் தமிழ் இனத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

இவை நடந்தால் மட்டுமே ஜனாதிபதி கோட்டாபயவின் ஐ.நா உரை பொறுப்புக்கூறுவதாக அமையும்.

இல்லையேல் எல்லாம் சமாளிப்பு நாடகமேயன்றி வேறில்லை என்பது அறியப்படும்.

# யாழில் இரு பல்பொருள் அங்காடிகளில் திருடியவர்

## சில மணி நேரங்களில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரண்டு பல்பொருள் அங்காடிகளுக்குச் சென்று வெளிநாட்டு சொக்லேட்டுகள் மற்றும் சம்போக்களைத் திருடியவர் சில மணி நேரங்களிலேயே பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள இரண்டு பல்பொருள் அங்காடிகளில் நேற்றுக் காலை சம்பவம் இடம்பெற்ற நிலையில் சிசிரிவி காணொளிப் பதிவை வைத்து சந்தேகநபர் நண்பகல் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டார்.

அவர் இரண்டு பல்பொருள் அங்காடிகளுக்கு நேற்றுக் காலை சென்று தலா 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுச் சொக்லேட்டுகள் மற்றும் சம்போக்களை திருடி ஆடைக்குள் மறைத்து வெளியேறியமை சிசிரிவி கமராவில் பதிவாகியிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல்கள் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று சிசிரிவி காணொளி பதிவுகளைப் பார்வையிட்ட யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சில மணி நேரத்துக்குள் சந்தேகநபரைக் கைது செய்தனர். சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ம-3,33)

# கிளிநொச்சி சாந்தபுரத்தில் மின்னல் தாக்கியதில் கட்டடம் சேதம்

(முறிகண்டி)

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் மின்னல் தாக்கியதில் வேம்பு பிளந்து விழுந்ததில் கட்டடம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சாந்தபுரம் பகுதியில் 24ஆம் வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரணைமடு நன்னீர் மீனவர் சங்க கட்டடம் முன்பாக இருந்த வேப்பம் மரத்தினை மின்னல் தாக்கியுள்ளது. குறித்த மரம் பிளந்து முறிந்து விழுந்துள்ளது.

இதன்போது குறித்த கட்டடத்தின் கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையம் சேத விபரங்கள் தொடர்பான அறிக்கையைத் தயாரித்து வருகின்றனர்.

(ம-3,100)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### படிமுறை வளர்ச்சி: ஆன்மாவின் கூறு அல்ல

ஆரம்பம் (அநாதி)- ஆன்மாவிற்கு ஆரம்பம் இல்லை. ஆண்டவனுக்கு ஆரம்பம் என்று ஒன்று இருந்தால், அவன் ஆண்டவனே அல்ல.

பற்றாக்குறை (அபாவா)- ஆன்மாவிற்கு பற்றாக்குறை இல்லை. பற்றாக்குறை உள்ளது எதுவும் முழுமையானதல்ல. ஆன்மாவிற்கு எந்தப் பற்றாக்குறையும் இல்லை. அது முழுமையானது. தனக்கு வெளியே ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை பற்றாக்குறை சுட்டிக்காட்டுகிறது. அந்த நிலை ஆன்மாவிற்கு இல்லை. எனவே நீங்கள் வளரவேயில்லை என்று எண்ணினால் கவலைப்படவேண்டாம். ஆன்மாவிற்கு நெருக்கமாக நீங்கள் இருக்கிறீர்கள். (சிரிப்பு)

(தொடரும்)

# காங்கேசன்துறையில் முதியவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் வீடொன்றில் இருந்து முதியவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீமன்காமம் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த முதியவர் கடந்த சில தினங்களாக வீட்டை விட்டு வெளியே வராத நிலையில் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் வீட்டின் கதவை உடைத்துப் பார்த்த போது முதியவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த முதியவர் சில நாட்களுக்கு முன்னரே உயிரிழந்து விட்டார் எனவும் அதனால் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகவும் சம்பவம் தொடர்பில் தாம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,33)

# யாழில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 23 பேர் உட்பட வடக்கில் 36 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்போதனாவைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் அடிப்படையில்,

**யாழ்.மாவட்டத்தில் 23 பேர்**

யாழ்போதனாவைத்தியசாலையில் 6 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 4 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 2 பேர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 2 பேர்,பலாலி விமானப்படை முகாமில் 03 பேர்.

**வவுனியா மாவட்டத்தில் 6 பேர்**

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 5 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பேர்**

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 3 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 2 பேர்.

என தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ம-3)

## மருத்துவக் குறிப்பு

வறட்டு இருமலுக்கு உப்பையும் மிளகையும் பொடி செய்து காய்ச்சிய தேனில் கலந்து உள்ளுக்கு சாப்பிட்டு ஒரு டம்ளர் காய்ச்சிய பசும்பால் பருக குணமாகும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கற்பதும் கேட்பதும் இறைவனை அடைவதற்கே. பட்டம் பெறுவதற்கெற்கும் சிறந்த அறிவாளி என்று பிறர் மெய்ச்சுவதற்கென்றும் கூட்டத்தில் நின்று மொழிக்கு மொழி நிந்திக்கவும் இனிமையாகவும் சதுரப் பாடாகவும் பேசுவதற்கே என்றும் படிக்காதே.

ஒரு பெண் கலகலப்பாகப் பழகுவதனாலேயே பிழையுள்ளவள் என்று கருதிவிடக்கூடாது. வேப்பிலையினால் மந்திரம் சொல்லிப் பேயை ஓட்டிவிடலாம். சந்தேகப் பேயை ஓட்டிவிட முடியாது. இவ்வாறு ஆண்களைப் பெண்கள் சந்தேகிப்பதும் பெண்களை ஆண்கள் சந்தேகிப்பதும் வாழ்வில் அமைதியை அழிக்கும் (தொடரும்)

## இராசிபலன்

24.09.2021
புரட்டாதி 08, வெள்ளிக்கிழமை
திருதியை முற்பகல் 8.45 மணிவரை
அச்சுவினி முற்பகல் 9.58 மணிவரை
சுபநேரம் -6.02- 7.32 மணிவரை
இராகு காலம் -10.32- 12.02 மணிவரை
சந்திராஷ்டமம்- அத்தம்
சங்கடகர சதுர்த்தி விரதம் வளவன்


மேஷம்
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர்.


ரிஷபம்
சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொழில் ரீதியான அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மிதுனம்
மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் கௌரவம் கூடும் நாள், போசன சுகமுண்டு.


கடகம்
கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்,தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.


சிம்மம்
மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும்,தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


கன்னி
ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.


துலாம்
பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், போசனசுகமுண்டு.


தனுசு
எதிர் பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.


மகரம்
வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


கும்பம்
உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதனை தவிர்ப்பது நல்லது, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்
பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

முயற்சி செய்தால் எந்த வேலையையும் எளிதில் செய்து விடலாம்.

# நாட்டை முழுமையாக திறக்க வேண்டாம் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்து

(கொழும்பு)

**நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை நீக்கும் முடிவை எடுக்கும் போது நாட்டை முழுமையாக திறக்க வேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.**

சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் ஜெனரல் ஹேமந்த ஹேரத் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



நாட்டை முழுமையாக ஒரே நேரத்தில் திறக்க பரிந்துரைக்கப்படவில்லை என்றும் நாடு முழுமையாகத் திறக்கப்படுமானால், நிலைமை இன்னும் மோசமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனவே, படிப்படியாக நாட்டைத் திறப்பது மிகவும் பொருத்தமானது என்றும் இதனால் கொரோனாப் பரவலுக்கு வழி வகுக்கும் காரணிகள் உள்ளதா என்று நாம் பார்க்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.(நி-5)

# கப்ராலின் நியமனத்திற்கு எதிராக அடிப்படை உரிமை மனுத்தாக்கல்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று உயர் நீதிமன்றில் இரண்டு அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்துள் ளனர்.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார ஆகியோரே இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அஜித் நிவார்ட் கப்ரால், சட்டமா அதிபர், நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் பி.பி. ஜயசுந்தர ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (நி-5)



# வஜிரவிற்கு பதிலாக சாகல கட்சித் தலைமை தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முழு பொறுப்பும் கட்சியின் உப தலைவரான சாகல ரத்நாயக்கவுக்கு வழங்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான வஜிர அபேவர்தன இந்த மறுசீரமைப்பு



பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுதில்லை என்பதால், கட்சியின் தலைமை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதனடிப்படையில், கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுடன் சாகல ரத்நாயக்க, எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# முதலீட்டாளர்களை ஊக்குவிக்க விசாக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் முகமாக விசாக் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீட்டிப்பது தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திருத்த மசோதாவின் அடிப்படையில் குறித்த விசாக் கால எல்லை நீட்டிக்கப்பட உள்ளது.

இது தொடர்பான திருத்த மசோதா ஒன்றினை அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இரண்டாவது வாசிப்புக்காக இந்த மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இக்குழு தனது ஒப்புதலை தெரிவித்துள்ளதாக பாராளுமன்றத் தகவல் தொடர்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டம் எண் 20 பிரிவு 14 இன் திருத்த சட்டத்தின் கீழ் தற்போதைய விசா வழங்கும் காலமான 2 வருடத்தை 5 வருடங்களாக அதிகரிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சரின் அனுமதியுடன் குறித்த விசா நீட்டிப்பு வழங்கப்படும் காலம் 5 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக அதிகரிக்கப் படவும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் குறித்த இத்திருத்தம் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்குப் பாதுகாப்பான சூழலோடு மேலும் பல சமூக, பொருளாதார நன்மைகள் ஏற்படும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சரத் ரூபசிங்க இதன் போது ஆலோசனைக் குழுவிடம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. (நி-5)

## உத்தியோகத்தர்...

கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட குறித்த உத்தியோகத்தர் ஏற்கெனவே சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானவர் என்றும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் கடந்த 16ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (ம-3,18,33)

## வடமராட்சியில்...

பப் பெண்ணொருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி நவிண்டிலைச் சேர்ந்த தவேந்திரன் துளசிகா (வயது - 37) எனும் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த பெண் சில வாரங்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று குணமாகி இருந்தார் எனவும், இந்நிலையில் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை குறித்த பெண் லண்டனில் உள்ளவரை திருமணம் முடித்திருந்ததாகவும், மிக விரைவில் வெளிநாட்டில் உள்ள தனது கணவனிடம் செல்ல இருந்தார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர். (ம-3,33,60)

## மின்னல் தாக்கி...

லைக்கேணியைச் சேர்ந்த குயின்ரன் உமேஸ் (வயது- 35) என்பவர் உயிரிழந்ததுடன், கட்டைக்காட்டைச் சேர்ந்த ஸ்ரானிலேல் ஜெயக்குமார் (வயது-45) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

நேற்று பிற்பகல் அப்பகுதியில் மழை பொழிந்ததாகவும் அச்சமயம் வெற்றிலைக்கேணி கோரியடிப் பகுதியிலுள்ள வாடியில் நின்றிருந்த மீனவர்கள் மீது மின்னல் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,18,60,64)

## 72...

மேலும் 72 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 42 ஆண்களும் 30 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 09 ஆண்களும் 03 பெண்களுமாக 12 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 33 ஆண்களும் 27 பெண்களுமாக 60 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 12,448 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-3)

## திலீபனின் நினை...

உத்தரவு வழங்கியாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இந்தத் தடை உத்தரவு பொலிஸாரினால் பெறப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடத்த ஏற்பாடாகியுள்ள 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதித்து உத்தரவிடுமாறு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரினால் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் திலீபனை நினைவுகூரும் நிகழ்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன் நாட்டில் நிலவும் கோவிட்-19 பரவல் காரணமாக நடைமுறையில் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைய நிகழ்வுகளை நடத்த முடியாது.

எனவே திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிக்கவேண்டும் என்று பொலிஸாரினால் மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் தடைக் கட்டளை வழங்கியது.

எனினும் தடைக் கட்டளையில் எவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை.(ம-3,18,33)

## க.பொ.த (சா/த)...

ரவு வெளியாகின.

பெறுபேறுகளை https://doenets.lk/examresults என்ற இணைய முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

அழகியல் பாட செயல்முறைப் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக குறித்த இப்பரீட்சைகள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கஜேந்திரன்...

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் அஞ்சலி செலுத்த முற்பட்டபோதே கஜேந்திரன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி சிலரை ஒன்றுதிரட்டி நினைவேந்தல் நிகழ்வை நடத்தினார் என்ற அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட மூவருக்கும் பிஅறிக்கை தயாரிக்கப்பட்ட நிலையில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மூவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுமாறு அறிவுறுத்தலின் கீழ் இவ்வாறு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-3,18,33,60,101)

## இனப் பிரச்சினை...

நியூயோர்க் நகரில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

வலுவான உள்நாட்டுப் பொறிமுறைகளினூடாக முன்னோக்கிச் செல்லும் போது வேறு எந்த வெளிப்புறப் பொறிமுறைகளையும் இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளினதும் நலன் கருதி இனப்பிரச்சினைகளுக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமானதும் நீதியானதுமான தீர்வுகள் அவசியம் என்பதை இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் இலங்கை அரசாங்கம் செயற்படுத்தும் வெற்றிகரமான நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு விளக்கினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறு

# பொலிஸார் கையாண்டது மிகவும் பாரதூரமானது

## கஜேந்திரனின் கைது தொடர்பில் கூட்டமைப்பு கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.,நல்லூரில் தியாகதீபம் திலீபனை நினைவேந்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது. அதேபோன்று நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தினூடாகத் தடைகளும் விதிக்க முடியாது.

எந்தவொரு அத்துமீறலும் இன்றி, மக்கள் கூட்டம் இன்றி, கொரோனா பாதுகாப்பு மீறல் இன்றி ஓர் மக்கள் பிரதிநிதி மேற்கொண்ட நினைவேந்தலை பொலிஸார் கையாண்ட விதம் மிகவும் பாரதூரமானது.

கஜேந்திரன் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தையேனும் வழங்காது அவரை இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி குற்றவாளியைக் கொண்டு செல்வது போன்று பொலிஸார் கொண்டு சென்றனர்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது" என்றார். (ம-3)

பரிசீலனை செய்தல், கைதிகளாகவுள்ள விடுதலைப் புலிகளை விடுதலை செய்தல் மற்றும் காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் சபை போன்ற சுயாதீன நிறுவனங்களுக்கு அதிகாரமளித்தல் போன்ற முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் வெளிநாட்டு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதி அமைச்சு ஆகியன ஒத்துழைப்புடன் செயற்படுவதனையும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

2009 மே மாதத்தில் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், எஞ்சிய விடயங்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடைமுறைகள் மற்றும் உறுதியான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு விளக்கினார். பல முனைகளில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் முயற்சிகள் தொடர்வதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

வலுவான உள்நாட்டுப் பொறிமுறைகளினூடாக முன்னோக்கிச் செல்லும்போது, வேறு எந்த வெளிப்புறப் பொறிமுறைகளையும் இலங்கையால் ஏற்றுக் கொள்ள முடியாது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதன்போது வலியுறுத்தினார். (ம-3)

## யாழில் உயிரி...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

58, 66, 70 வயதுடையவர்களே கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-3,30)

## மகிந்த தலைமை...

யில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்லல், 2021ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்ட முன்மொழிவைச் சமர்ப்பித்தல் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்டமூலங்களை அவ்வாறு சமர்ப்பிப்பதற்கு முன்னதாக ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் திட்டமொன்றை தயாரிப்பது தொடர்பில் இதன்போது பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாட்டின் மூலம் மின்சார பாவனையாளர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுடன் சுமார் இரண்டு மணிநேரம் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. (ம-3)

## கோவிட் புதிய...

மாக உலக சுகாதாரத் துறையினர் கூடிய கவனத்தை செலுத்தி வருகின்றனர்.

ஜப்பானில் முதலில் அடையாளம் காணப்பட்ட இந்த வைரஸ் திரிபு R.1 என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் திரிபானது பரவுதல், பெருகுதல், நோய் எதிர்ப்பு சக்தியை மீறி செல்வது வெளிப்படையாகத் தெரியும் மாறுபாடு என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ம-3)

## கிளிநொச்சியில்...

ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த நபருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## திலீபனின் நினைவுத்...

பட்டுள்ளனர்.

தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு நடத்தும் எந்தவொரு நபரையும் கைது செய்யும் வகையில் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள கோவிட்-19 தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு அமைய நீதிமன்ற தடை உத்தரவின்றி இந்த நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு உயர் மட்டத்திலிருந்து பணிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைய யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட மூவர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

திலீபனின் 34ஆவது ஆண்டு நினைவு வாரம் கடந்த 15ஆம் திகதி நல்லூரில் உள்ள திலீபனின் நினைவிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் நினைவேந்தல் தூபிக்கு சென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஈகச்சுடர் ஏற்றி, திலீபனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33,60,101)

# கோவிட்டை விரட்ட மந்திரித்த பானைகளை ஆற்றில்போட்ட மகிந்தவின் வைத்தியர்

## கொரோனாவால் உயிரிழப்பு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட சுய குணப்படுத்தல் வைத்தியர் என தன்னைத்தானே அழைத்துக் கொண்ட எலியந்த வைட், கொரோனாவால் பாதிக்கப்பட்டு கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வாரம் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

எந்த தடுப்பூசியும் அவர் பெற மறுத்துவிட்டார். அவரது உலகளாவிய வலிமை மற்றும் குண்டலினி சக்தியை மட்டுமே நம்பியிருந்தார். இதன்மூலம் கொரோனாவை ஒழிக்கலாமென கூறி வந்தார்.

குறித்த மருத்துவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட மருத்துவர் ஆவார். லசித் மலிங்க உட்பட பல கிரிக்கெட் வீரர்களின் வியாதிகளை குணப்படுத்தியதாக அவர் கூறுகிறார். அவர் பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர் அல்ல.

இலங்கையிலிருந்து கோவிட் -19 ஐ ஒழிக்கும் சடங்கை அவர் மேற்கொண்டது சர்ச்சையானது. அவரால் வழங்கப்பட்ட மந்திரிக்கப்பட்ட பானைகளை அமைச்சர்கள் சிலர் ஆறுகளில் வீசியிருந்தனர். அப்போதைய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் இந்த பானைகளில் ஒன்றை ஆற்றில் வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# வவுனியாவில் கோவிட்டால் இரண்டு பேர் உயிரிழப்பு

## 94 பேருக்கு தொற்று

வவுனியாவில் மேலும் 94 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் 2 பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுக் காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 94 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், கோவிட் தொற்றுக் காரணமாக வவுனியாவில் நேற்று முன்தினம் 2 பேர் மரணமடைந்துள்ளனர். சாந்தசோலை பகுதியில் பெண் ஒருவரும் (வயது-58), தவசிகுளம் பகுதியில் பெண் ஒருவரும் (வயது-35) என 2 பேர் மரணமடைந்துள்ளனர். (ம-03,250,299)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்று (23.09.2021) வியாழக்கிழமை இரவு வெளியான 2020 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய யாழ்.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவி

செல்வி கம்சிகா வரதராசா

4A, 3B, S சித்திபெற்றுப் பெருமை சேர்த்துள்ளார்.



மாணவி கம்சிகா சிறப்பான பெறுபேறுகள் பெற்றமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் மேலும் பல சாதனைகள் படைக்க எல்லாம்வல்ல மயிலங்காடு ஞானவைரவப் பெருமான் துணையிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2687)

வாழ்த்துவோர் :
அம்மா, அப்பா, அம்மம்மா, சித்தி, மாமா.
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.



# மரண அறிவித்தல்



## திருமதி தமிழினி பிரபாகரன்

( அபிவிருத்தி உத்தியோகத்தர் – பிரதேச செயலகம், உடுவில் )

ஆஸ்பத்திரியடி கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமிழினி பிரபாகரன் நேற்று முன்தினம் (22.09.2021) புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (நில அளவைத் திணைக்களம்) - பேரின்பராஜி (லிகிதர் - யாழ். கச்சேரி) தம்பதியரின் பாசமிகு மகளும் வயிரவப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும் பிரபாகரனின் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) பாசமிகு மனைவியும் துவாரகனின் (மாணவன் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும் ஜமுனா (சுவிஸ்), ஜெயமயூரன் (லண்டன்), யாழினி (லண்டன்), கஜேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வக்குமார், மனோஜா, மதியழகன், தனோயா, சுதாகரன், கார்த்திப்பிரியா (டுபாய்), வரதராஜன் (உதவிப் பிராந்திய முகாமையாளர் - Abans), சுதர்சினி (அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை மறுதினம் (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2688)

தகவல்:-
கோண்டாவில் மேற்கு 077 605 1245 வ. பிரபாகரன் (கணவர்)


# 1,368 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 1,368 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 510, 040 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இது வரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 421,742 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 12,376 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். (ம-03)


## வேலையாள் தேவை

பூக்கல் அடிப்பதற்கு, இயந்திரத்தில் கல் அரிவதற்கு மற்றும் தூண் அறுப்பதற்கு வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (7980)

077 905 0185
(நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)



## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் ( டச்சு றோட் ) பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( நில.பர 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் )

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
(தரகர் தேவையில்லை) (7986)

077 814 7389, 077 614 7333



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் இரண்டாம் ஒழுங்கையில் 20 அடிப் பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமான சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு.
இரண்டு (02) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
[யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரம்]
தொடர்புகொள்ளும் நேரம் :
காலை 9.00 – மாலை 6.00 மணிவரை
ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம்.
[ தரகர் தேவையில்லை ] (7970)

076 221 2037, 077 288 0152
076 734 1023



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.